மலர் : 20
இதழ் : 10

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

அக்டோபர் 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்



## வெளிச்சத்தின் வேர்கள்...

# மறைவட்ட பொதுக்குழுக்கள்



முளகுமூடு மறைவட்டம்



மாத்திரவிளை மறைவட்டம்



புத்தன்கடை மறைவட்டம்



திரித்துவபுரம் மறைவட்டம்



வேங்கோடு மறைவட்டம்


YouTube
https://www.youtube.com/channel/UCEID2zYUEd7Bmy_MeyNM0g

Website
bcckuzhithurai.com

E-mail ID
bcckuzhithurai@gamil.com

Office No.
8870513177

# உள்ளே...


★ **இயக்குநரிடமிருந்து...**

★ **விழிகளை விதையாக்குவோம்...**

அருட்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

★ **முகவரி இழந்த முதல் வரிகள்...**

அருட்பணி. **எ. ஒய்சிலின் சேவியர்**

★ **வழிநடத்தும் வெற்றிமாலை – செபமாலை...**

திருமதி. K. **மரிய ரெத்தின பாய்**

★ **நெருக்கமாக்குகிறதா? தனிமையாக்குகிறதா? – இணையம்...**

அருட்பணி. **எட்வின் ராஜ் சி.**

★ **விவிலிய புதையல்...**

★ **சிந்தனை...**

★ **நலத்திட்டங்கள்...**

★ **தகவல்...**

★ **அவசர உதவி எண்கள்...**

★ **நகைச்சுவை துணுக்கு...**

★ **சிறார் பக்கம்...**

★ **வாழ்வை வழிநடத்தும் நெறிகள்...**

★ **தெரிந்து கொள்வோமா...**

★ **ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்...**


## ஆசிரியர் குழு


அருட்பணி. M. **ஆல்வின் விஜய்**

வேதியர் M. பேபி கமலா

திரு. S. ஜாண் பெல்லார்மின்

திருமதி. T. ஷீலா

திருமதி. K. ரெத்தினபாய்

## இயக்குநரிடமிருந்து



இறைஇயேசுவில் அன்பானவர்களே! அன்னைமரியாவை வணக்கம் செய்து, அவரது பரிந்துரையால் வளங்களைப் பெற்று வாழ வெளிச்சத்தின் வேர்களாக வாழ்வை மாற்றியமைக்க அனைவருக்கும் வாழ்த்துக்களும் செபங்களும்.

ஈரைந்து மாதம் கருவறையில் உருவானக் குழந்தைக்கு இவ்வுலகம் வெளிச்சம், ஆழ்கடலில் பயணிப்பவர் கரையைச் சேர கலங்கரை விளக்கு வழிகாட்டி வெளிச்சம் அளிக்கிறது. ஏட்டுக்கல்வி கற்று அறிவுக்கண்ணோடு நன்மை தீமையைக்கண்டறிய ஆய்ந்தறிய பள்ளிக்கூடம் வெளிச்சமளிக்கிறது.

துன்பத்தில் இருந்து இன்பத்தை அடைந்து, பகைமையை விட்டொழித்து நன்மையை நற்செய்தியாகப் பறைசாற்ற திருவிவிலியம் வெளிச்சமளிக்கிறது.

ஆம். கிறிஸ்தவர்களாகிய நாம் திருஅவை என்னும் ஆணிவேரை ஆடித்தளமாகக் கொண்டு, சிதறிக்கிடக்கும் மாந்தரை ஒன்றிணைக்கவும், இறைமகன் இயேசு விட்டுச்சென்ற நற்செய்தியைப் பரப்பிடவும் நமக்கு அழைப்பு விடுக்கிறது.

பிறரின் துன்பத்தில் உடனிருப்பவராக, கலக்கமுற்ற நேரங்களில் ஆறுதலளிப்பவராக, தேவையிலிருக்கும் போது உதவிச் செய்பவர்களாக நாம் மாற்றம் பெறும் போது, நம் அகக்கண்களில் வெளிச்சம் பிறக்கும். அன்னை மரியாவின் பரிந்துரையை நாடும் நாம் அனைவரும் அவரின் பாதையைப் பின்பற்ற அர்ப்பணிப்பு, பிறர்நலம் பேணுதல், பரிவு கொள்ளுதல், உடனிருத்தல் போன்ற நற்பண்புகளை ஏற்று வாழ்வோம்.

நவீனக் கண்டுபிடிப்புகளுக்கு அடிமையாகாமல், பிறர் நலம் பேணும் செயல்களில் முழுமனதோடு ஈடுபடுவோம். இறையச்சம் என்ற வெளிச்சம் பெற்றவர்களாக நம்மை சார்ந்துள்ள குடும்பங்களுக்கு, அன்பிய உறவுகளுக்கு வெளிச்சம் தரும் பயணிகளாவோம் என்று மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி. **M. ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பியப் பணிக்குழு

முதல் வாரம்

# விழிகளை விதையாக்குவோம்



அருட்பணி. **ம. டைட்டஸ் மோகன்**



ஒரு மனிதனின் வாழ்க்கையில் பார்வை என்பது கிடைத்ததற்கரிய வரம். ஆனால், ஒரு சிலருக்கு பிறவியிலிருந்தோ அல்லது விபத்துகளினாலோ இந்த வரம் மறுக்கப்படுகிறது. அத்தகையவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் மகத்தான செயலே கண்தானம். இது வெறும் உடல் உறுப்பு தானம் அல்ல, மாறாக, ஒரு புதிய வாழ்வை, புதிய கனவுகளை, புதிய உலகத்தை ஒருவருக்கு வழங்கும் அற்புதம். கண்தானம் என்பது ஒரு தியாகம். அது எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பாராத ஒரு செயல். அது ஒரு விதையைப் போன்றது. விதையைப் புதைத்தாலும், அது ஒரு விருட்சமாக வளர்ந்து பலரின் வாழ்வுக்கு நிழலைத் தரும். மரணத்திற்குப் பின் நம் கருவிழி நம்மை விட்டு விலகினாலும், அது இன்னொருவரின் உலகில் ஒளியைப் பாய்ச்சுகிறது. எனவே கண்தானம் மூலம் நம்முடைய மரணத்தைக் கூட, மற்றவரின் வாழ்வின் தொடக்கமாக மாற்றி, விதியை மாற்றியமைக்கிறோம்.

**கண்தானத்தின் நன்மைகள்** :

ஒரு கண்ணாடிக் கதவு திறக்கப்பட்டு, ஒளி ஊடுருவுவதுபோல, ஒருவரது கருவிழிகள் தானமாக வழங்கப்படுகையில், இருண்ட உலகம் திடீரெனப் பிரகாசமாக மாறும். கண்தானம் செய்வதன் மூலம் பல நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றுள் சில இதோ:

***பார்வைக்கு ஒரு மறுபிறவி:*** கண்பார்வை இழந்த ஒருவருக்கு, கண்தானம் என்பது ஒரு மறுபிறவியைக் கொடுக்கிறது. அவர்கள் மீண்டும் சூரிய உதயத்தையும், மலர்களின் வண்ணங்களையும், அன்பான முகங்களையும் பார்க்க முடியும்.

***மனிதாபிமானம் வளரும்:*** கண்தானம் என்பது ஒருவரது உயர்ந்த மனிதாபிமானத்தைக் காட்டுகிறது. இது பணம், பதவி போன்றவற்றை விட மேலான அன்பையும், அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகிறது.

*சமூக மாற்றத்திற்கான ஊக்கம்:* ஒரு சிலர் கண்தானம் செய்வதைக் காணும்போது, மற்றவர்களும் அதேபோலச் செய்ய ஊக்கமளிக்கப்படுகிறது. இதன்மூலம், சமூகத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**யார் கண்தானம் செய்யலாம்?**

பெரும்பாலானோர் கண்தானம் செய்யலாம். இதில் வயது ஒரு தடையல்ல. எய்ட்ஸ், மஞ்சள்காமாலை, வெறிநாய்க்கடி, மூளைக்காய்ச்சல் போன்ற ஒரு சில நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே கண்தானம் செய்ய முடியாது. நீரிழிவு, இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கூட கண்தானம் செய்யலாம். கண் அறுவை சிகிச்சை செய்தவர்கள், மூக்குக்கண்ணாடி அணிந்தவர்கள்கூட கண்தானம் செய்யலாம்.

கண்தானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள், மரணத்திற்குப் பிறகு கண்கள் தானம் செய்யப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய, உறவினர்களிடம் அல்லது குடும்பத்தினரிடம் தங்கள் விருப்பத்தைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

**கண்தானத்திற்குப் பின்னால் இருக்கும் அறம் :**

ஒரு உயிர் தன் பயணத்தை முடித்துக்கொள்கிறது. அதன் உலகப் பார்வை, அது கண்ட காட்சிகள், அதன் கனவுகள் அனைத்தும் அந்தக் கண்ணிமைகளுக்குள் புதைந்துபோகின்றன. ஆனால், இந்த இறுதிக் கணத்தில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது. ஒருவர், தன் விழிகளைத் தானமாக வழங்குவதன் மூலம் மற்றவரின் இருண்ட விதியை கண்தானம் செய்பவர் மாற்றியமைக்கிறார். விதியென்பது இருளை அல்ல, ஒளியை நோக்கித் திறக்கும் புதிய கதவு என்ற ஆழமான பொருளை இச்செயல் உணர்த்துகிறது. இது ஒரு முடிவு அல்ல, மாறாக, ஒரு புதிய தொடக்கம்.

கண்தானம் என்பது ஒரு தியாகம். இது எந்தவித பிரதிபலனையும் எதிர்பார்க்காத ஒரு செயல். ஒரு விதை மண்ணுக்குள் புதைக்கப்படும்போது, அது மரமாக வளர்ந்து பலருக்குப் பயன் தருவதுபோல், ஒருவரது கண்கள் தானம் செய்யப்படும்போது, அது பலரின் வாழ்வுக்கு ஒளியைத் தருகிறது. கண்தானம் ஒருவரின் உடல் அழியும்போதும், அதன் ஒரு பகுதி உயிருடன் இருக்கிறது என்பதை உணர்த்துகிறது. இது ஒரு ஆழமான அறம் சார்ந்த செயல். மற்றவர்களின் துயரத்தைக் குறைப்பதும், அவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்படுத்துவதும் மிக உன்னதமான அறம். கண்தானம் இந்த அறத்தை நிறைவு செய்கிறது. கண்தானம் செய்தவரின் கண்கள், புதிய உலகில் புதிய அனுபவங்களைப் பெறும்.

**சிந்திக்கத் தூண்டும் சில கேள்விகள்...?**

- உங்களுடைய கண்கள் வேறு ஒருவருக்குக் கொடுக்கப்படுவதன் மூலம், நீங்கள் இந்த உலகத்தை மீண்டும் பார்க்கிறீர்கள் என்ற எண்ணம் உங்களுக்கு எத்தகைய உணர்வைத் தருகிறது?
- கண்தானம் செய்வதற்கு நீங்கள் தயங்கினால், அதற்கான காரணம் என்ன? அந்தக் காரணங்கள் கண்தானத்தால் கிடைக்கும் நன்மைகளுடன் ஒப்பிடுகையில் நியாயமானதா?
- உங்களுடைய உறவினர் அல்லது நண்பர் ஒருவர் கண்தானம் செய்வதாக முடிவெடுத்தால், நீங்கள் அதை ஆதரிப்பீர்களா அல்லது தடுப்பீர்களா? ஏன்?
- உடல் உறுப்பு தானம், குறிப்பாகக் கண்தானம் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏன் இன்னும் குறைவாக உள்ளது? விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான வழிகள் என்னவெல்லாம்?
- கண்தானம் என்பது ஒரு தியாகமாகக் கருதப்பட வேண்டுமா? அல்லது ஒரு மனிதனின் கடமையாகக் கருதப்பட வேண்டுமா?
- ஒருவர் தனது மத நம்பிக்கைகளுக்கு எதிராக கண்தானம் செய்வதை எதிர்த்தால், அதை நீங்கள் எப்படிப் பார்ப்பீர்கள்? மத நம்பிக்கைகளுக்கும் மனிதாபிமானத்திற்கும் இடையே உள்ள உறவு என்ன?

**"விதியது, உன் விழிகளுக்குக் கட்டுப்பட்டதல்ல,**
**ஆனால், நீ உன் விழிகளால் விதியையே கட்டுப்படுத்தலாம்.**
**விழிகளை விதியாக்கு, புதிய வாழ்வைக் கொடு."**

**இரண்டாவது வாரம்**

# முகவரி இழந்த முதல் வரிகள்





அருள்முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**
வட்டார முதல்வர், திரித்துவபுரம்.

இக்கட்டுரையை எழுதுவதற்கு என் மனம் மறுக்கிறது. என் பேனா அழுகிறது. என் எண்ணங்கள் எரிமலையாய் எழுகின்றன. என் உணர்வுகளை உலுக்கிப் பார்க்கின்றன. என்னால் தலைகுனிந்து எழுத முடியவில்லை. தலைகுனிந்தே நிற்கிறேன், தவிக்கிறேன்,

தத்தளிக்கிறேன். முகவரி இழந்த முதல்வரிகள் இவர்கள் யார்? யாரைக் குறிப்பிட்டு இத்தலைப்பில் கட்டுரை எழுத என்னிடம் பணித்திருக்கிறார்கள். பைத்தியம் பிடிக்கிறது, பிரம்மையாக இருக்கிறது. என் தாத்தா பாட்டிகளும், பாட்டன், பூட்டன்களும், மூத்தோர், முதியோரும் முகவரி இழந்த முதல் வரிகளா? இல்லை முகவரி இழந்த முதல் வலிகளா? இல்லை முகவரி தந்த முதல் விழிகளா? பலவற்றைக் கேட்டு தெளிவுபெற ஆசையாய் இருக்கிறது. இன்னும் சந்தேகங்களை அடுக்கிக் கொண்டேப்போனால் சங்கடங்கள் உருவாகும் என்பதால் கேள்விகளை இதோடு நிறுத்திக்கொள்கிறேன். கட்டுரை நோக்கி நகர்ந்துச் செல்ல ஆசைப்படுகிறேன்.

முகவரி தந்தவர்களை முகவரி இழந்தவர்கள் என்று சொல்லக்கூடாது, சொல்ல இயலாது. நாம் வாழ வேண்டுமென்பதற்காகத் தங்களது வாழ்வை அர்ப்பணம் செய்த அனுபவ ஞானிகளை முகமிழந்தோர், முகவரியிழந்தோர் என்று சொல்ல முடியாது. அவர்கள் முகங்களுக்குள் முதுமை என்கிற வரிகள் முகாமிட்டதால் முகவரி இழந்தவர்களைப் போல் தோன்றுகிறார்கள். ஆனால் அவர்கள் முகவரிகளை முகத்துக்குள்ளே புதையலாய் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நாம் உயரத்தில் உட்கார வேண்டுமென்பதற்காக முகவரியைத் தவிர அத்தனையையும் இழந்தவர்கள்தான். இளமையை இழந்தார்கள், ஆற்றலை இழந்தார்கள், அறிவை இழந்தார்கள், திறமையை இழந்தார்கள், அழகை இழந்தார்கள், நேரத்தை இழந்தார்கள். ஆனால் தங்களது முகவரியை மட்டும் இழக்காமல் வைத்திருக்கிறார்கள். பிள்ளைகளுக்காக பிள்ளைகள் உயரங்களை எட்டிப் பிடிப்பதற்காக, பிள்ளைகள் உச்சங்களைத் தொடுவதற்காக, உயரே பறப்பதற்காக அனைத்தையும் இழந்தவர்கள்.

முகத்தில் தெரியும் முதுமை கோடுகளை வைத்துக்கொண்டு முகவரி இழந்த முதல் வரிகள் என்று சொல்ல முடியாது எனக் கருதுகிறேன். அவர்கள் இளமையை இழந்த முதியவர்கள் முதுமையைத் தொட்ட முதல் வரிகள் என்று சொல்லலாம். முதியவர்கள் தன்மானத்தையும், தன்னம்பிக்கையும் இழந்தவர்கள் அல்ல. அவர்கள் தன்மானத்தோடு வாழத் துடிப்பவர்கள். தன்மானத்தையும், தன்னம்பிக்கையும் விட்டுவிடாதவர்கள். எப்போதுமே அவர்களிடம் தனித்திமிர் இருக்கும். அவர்களின் பாதையும், பாணியும் தனி கெத்துதான். காரணம் எல்லாவற்றையும் பிள்ளைகளுக்காக இழந்தாலும் முகவரியை மட்டும் முதுமைக்கு முன்னால் தொட்டில் கட்டி தொங்கவிட்டிருப்பார்கள். அவர்கள் முகவரி இழந்த முதல்வரிகள் அல்ல முதுமையைத் தொட்ட முதல்வரிகள்.

பாசமிக்க நட்புகளே! உங்களிடம் கெஞ்சி கேட்கிறேன். முதியவர்கள் வாழ்ந்து முடிந்தவர்கள் அல்ல, வாழ ஆசைப்படுபவர்கள். அவர்களை வாழ்த்துங்கள்.

அவர்களை முடியும் மட்டுமல்ல, அவர்கள் வாழ்வு முடியும் மட்டும் நன்றாகப் பராமரிப்போம். அவர்களை நன்கு கவனிப்போம். அவர்களைக் குழந்தைகளைப்போல கண்காணிப்போம். அவர்கள் தனிமையாக வாழ ஆசைப்படுபவர்கள் அல்ல, தன்னிச்சையாக முடிவெடுக்க நினைப்பவர்கள் அல்ல, அவர்கள் பேரன் பேத்திகளோடு கொஞ்சி விளையாட ஆசைப்படும் இரண்டாம் நிலை குழந்தைகள். அவர்கள் அன்புக்காக மட்டும் ஏங்கக் கூடியவர்கள். அவர்கள் நமக்காக வாழ்வை இழந்தவர்கள். நமது இளமையில் நமது பெற்றோரை நாம் தூக்கி சுமப்போம்.

முதுமையின் முதல் வரிகளாய், முன்னோடிகளாய், முன்னுதாரணமாய் நம் முன்னால் தெரியும் இவர்களைப் போல் நாமும் முதுமை அடைவோம் என்பதை மறவாதிருப்போம். இன்று முதியவர்களை நாம் சுமந்தால் கடவுள் நாளை நம்மைச் சுமப்பார். எனவே முதுமையை மதிப்போம். முதியவர்களைச் சுமப்போம். முதுமைக்கு முதலிடம் கொடுப்போம். அவர்கள் வாழ்ந்து முடித்தவர்கள் அல்ல, வாழ்வு முடியும் மட்டும் வாழ ஆசைப்படும் அனுபவ ஞானிகள்!

**நன்றி**

மூன்றாவது வாரம்

# வழிநடத்தும் வெற்றிமாலை செபமாலை



திருமதி. **K. மரிய ரெத்தின பாய்,**
மறைமாவட்ட அன்பியச் செயலர்.



**"இதயம் சுருங்கி விரிவதால் நம்மவர் உதயப் பயணம் தொடர்கதை ஆகின்றது"**

பாதைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம், எப்படியும் வாழலாம் என்பது உலகப்பாதை இப்படித் தான் வாழ வேண்டும் எனப் பாதை வகுத்து, ஒழுக்க நெறியுடன், இறைவேண்டலுடன் வாழ்வது ஆன்மீகப்பாதை. கத்தோலிக்கத் திருச்சபையின் பாதுகாப்புக் கவசமாக, நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு அடுத்த படியாக விளங்குவது செபமாலை. மனிதனுடைய மனம் மாசு அகற்றி

விண்ணக நுழைவாயிலுக்கு அழைத்துச் செல்கின்ற ஓர் உன்னத உந்து சக்தியே செபமாலை. மீட்பின் வரலாற்றில் பயணித்து, மறை உண்மைகளைத் தியானிக்க உதவுகின்றது இச்செபமாலை.

செபமாலைக்கென வரலாறு ஒன்று உண்டு. செபமாலை செபிக்கும் பழக்கம் திருஅவையில் 13 ஆம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளது. தொடக்கக் காலங்களில் 150 முறை அருள்நிறைந்த மரியே செபமும் 150 முறை விண்ணுலக செபமும் 150 முறை திருப்பாடல்களும் செபிப்பது என்கின்ற முறை வழக்கில் இருந்துள்ளது. கி.பி. 1439 முதல் மறையுண்மைகளைச் செபமாலையில் அறிமுகப்படுத்தியுள்ளனர். மறையுண்மைகள் அனைத்தும் திருவிவிலியத்தில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளன. பின் சுருங்கிய அழகிய முறையில் செபமாலையை வடிவமைந்துள்ளனர். இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு, உயிர்ப்பு வரையான அனைத்து மறையுண்மைகளையும் கொண்டு தியானிப்பது தான் செபமாலை. வெற்றியைத் தந்து வழிநடத்துவது தான் செபமாலை என்பது விசுவாசிகள் நம்பிக்கை. துருக்கிப் போரில் செபமாலை செபித்து எதிரிகளைத் தோற்கடித்து வெற்றிக்கொண்டதால் கி.பி 1572 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏழாம் நாள் நம்மவர்களால் இன்று வரை செபமாலை விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. செபமாலை செபிப்பதால், வழிநடத்துவதால் நமக்கு வெற்றியைத் தருவதால் கிறிஸ்தவர்களாகிய நாமும் அக்டோபர் மாதம் முழுவதும் செபமாலை மாதம் எனக் கொண்டு, குடும்பமாய், அன்பியமாய், ஆலயமாய், கூட்டமாய், தனிமையாய் செபமாலை செபித்து இறைவனை, அன்னையை, மகிமைப்படுத்தி வருகின்றோம். செபமாலையை நம் ஆன்ம உயிர் மூச்சாகக் கொண்டுள்ளோம். அனைத்துச் செயல்பாடுகளிலும் முன்னிலைப் படுத்துகின்றோம். இன்னுமாய் நாம் ஆழ்ந்த பக்தியுடன் செபமாலை செபிக்கின்றபோது, மரியன்னை, தந்தை, மகன், தூய ஆவியானவர், வானதூதர் அணிகள் என ஒவ்வொருவரும் விண்ணகம் விட்டு மண்ணகம் வந்து நம்மைச் சூழ்ந்து நிற்பதை நம் அகக்கண்களால் உணர்ந்து போற்றுகின்றோம். ஒவ்வொரு செபமும் விண்ணகத்திற்கு நம்மை அழைத்துச் செல்கின்ற படிக்கட்டுகள் என உணர்கின்றோம், இன்புறுகின்றோம். அறிவிலே, மனக்குழப்பத்திலே, நோய்களிலே, சோதனைகளிலே என நமது மனதுக்குள் ஏகப்பட்ட வலிமொழிகள் இருக்கலாம். அடுத்தக் கட்டத்திற்கு நம்மை நகர்த்த முடியவில்லையே என வருந்துகின்றோமா? கலக்கம் வேண்டாம். விசுவாசத்தின் ஆணிவேராக இருக்கின்ற சஞ்சீவி வலிநிவாரணியாகிய செபமாலையைக் கையில் எடுத்து உருட்டுவோம். நம் துன்பங்கள் தூரப்போகும்.

இன்பக்கலசங்கள் நம் அருகே அடைக்கலம் புகும். துன்ப நேரங்களில் அம்மா என்று அழைத்துப் பாருங்கள் அன்னை அவர்களின் வழிநடத்துதலை உணர்வீர்கள்! செபமும் செபமாலையும் சேர்ந்தது தான் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்வு. எளிய மக்களுடைய வரப்பிரசாதம். படிக்காத பாமரர்களுக்கும் வாயைத் திறந்தாலே மடமடவென்று வருவது செபமாலை. செபிக்கத் தெரியாத மக்களுக்கு எப்படி செபிப்பது என்பதற்கு ஒரு நுழைவாயிலாக இருப்பதுவும் செபமாலை. செபமாலை இறைவனுக்கும் நமக்குமான தொடர்பை ஏற்படுகின்ற ஒரு பந்தம். தொப்பிள் கொடிபோன்ற உறவு. வழிநடத்துகின்ற ஒரு பாசக்கவசம். செபமாலை நம் வாழ்வின் ஒவ்வொரு நாளையும் புனிதமாக்குகின்ற நாளாக மாற்றுகின்றது. நம்மை வழிநடத்திக்கொண்டிருக்கின்ற செபமாலை செபத்தை நம்முடைய சுயநலனுக்காக அல்லாமல் மற்றவர்களுடைய நலனுக்காகவும் செபிக்கவேண்டும். எனது பிள்ளைகள், எனது குடும்பம் என்றே நம் எண்ணங்கள் வட்டமிடுகின்றன. ஆனால் நமது அன்னைக் கூறுவது வட்டத்தில் இருந்து வெளியே வாருங்கள், எனது அருமை மக்களே என்று... நாம் நமது என்ற எண்ணம் அகற்றுவோம். பிறர் நலனில் அக்கறை கொள்வோம். ஒரே குடும்ப உணர்வோடு வாழ்வோம் "**அன்னையே... அருள்நிறைந்த மரியே என்று உனை வேண்டி அருள்மாலையை உருட்டுகின்ற போது அருள் வரங்களால் எம் உள்ளமெல்லாம் நிரப்புதம்மா**"! எங்கள் வேண்டல்கள், விண்ணப்பங்கள் அனைத்தையும் செபமாலை வழியாகச் சமர்ப்பிக்கின்ற போது, வெற்றித் தந்து உந்தன் பாச வலையால் நிரப்புகின்றாயே தாயே என்று பக்த கோடிகளின் மகிழ்ச்சிக்குரல் எம் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது.

நாங்கள் செபமாலை செபிக்கின்ற போது ஒரு முனையை நாங்கள் பிடிக்க மறுமுனையை செபமாலை அன்னையாம் நீங்கள் பிடித்துக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை உணர்கின்றோம் அம்மா இறைமக்கள் ஒவ்வொருவரும் அன்னையின் செபமாலை என்னும் சரத்தில் கோர்க்கப்பட்ட மணிகள் என்பதே நமது அடையாளமாக விளங்குகிறது என்பதை உணர்ந்து இதயத்தில் செபமாலையை அழகுபடுத்துவோம்.

**சிந்தனைக்கு...**

1. செபங்களின் சங்கமமாகத் திகழ்கிறது செபமாலை உண்மையா? எவ்வாறு?
2. உன்னுடைய வாழ்வில் செபமாலை எத்தகைய இடத்தைப்பிடித்துள்ளது?
3. செபமாலை செபிக்கும் பழக்கம் உனக்கு உண்டுமா? அதனால் கிடைத்த வெற்றிகளை உன் மனதால் எண்ணிப்பார்.

நான்காவது வாரம்

# நெருக்கமாக்குகிறதா? தனிமையாக்குகிறதா? – இணையம்



அருட்பணி. **எட்வின் ராஜ் சி.**




**இறைவனுக்கே சவால்விட நினைக்குது இணையம் :**

இறைவனைச் சுற்றி சுழன்ற உலகம் இன்று இணையத்தைச் சுற்றுகிறது. அன்று இறைவனை நோக்கி விடை தெரியாக் கேள்விகள் எழுப்பப்பட்டது. இன்று இணையத்தின் வளர்ச்சியானது விடை தெரியாக் கேள்விக்கும் விடை தருவேன் என்று இறைவனுக்கே சவால் விடுத்து நிற்கிறது. தொழிற்புரட்சியின் விளைவாக உருவான தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் இணையத்தை வளர்த்தெடுக்கும் முயற்சியும், சமூகத்தின் இயங்குநிலையை இன்று மாற்றி இருக்கிறது. செயலிகள் (Apps) தொடங்கி செயற்கை நுண்ணறிவு வரை (AI-Artificial Intelligence) சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்களும் நேர்மறை எதிர்மறை விளைவுகளும் எண்ணில் அடங்காதவை எனவே எழுத்திலும் அடக்குவது கடினமே.

**சுற்றமும் சுற்றுச்சூழலும் உறவுகளை நெருக்கமாக்கியது :**

கூட்டுக் குடும்பமோ தனி குடும்பமோ இருபது, இருபத்து–ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை பெற்றோர் பிள்ளைகள், சொந்த பந்தம், ஆடுகள், மாடுகள், கோழிகள் என்ற வீட்டுச் சூழலும், வயல்வெளி, குளம், குட்டை, வாய்க்கால், வண்ணத்துப்பூச்சி, தட்டான், சிட்டுக்குருவி, குயில், காக்கை கூட்டம் என்ற அழகிய சுற்றுச்சூழலை மக்களிடையே உருவாக்கி உறவில் நெருங்கி வாழ்பவர்களாக வைத்திருந்தது. உறவுகளிடையே கருத்து வேறுபாடு அடிதடி சண்டைகள் ஏற்பட்டாலும் வீட்டுச் சூழலும், சுற்றுச்சூழலும் இயல்பாகவே உறவுகளை நெருங்கி வர வைத்தது. பள்ளிக்கூடத்தில் ஒன்றோ இரண்டோ நண்பர்கள், உறவு வட்டத்தில் நெருங்கிய சில உறவுகள், பகைமை மறந்து கொண்டாட்டங்களில் விருந்துகளில் உறவுகளை புதுப்பித்துக் கொண்டு நெருக்கமாக ஒருவர் மற்றவருக்கு உதவியாக, துன்ப நேரங்களில், இழப்பு–இறப்பு நேரங்களில் ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்திற்கு துணையாக நெருங்கி வாழ்ந்த காலங்கள் பசுமையின் காலங்களே.

**தொழில்நுட்பம் தொலைதூரமாக்கியிருக்கிறது :**

"**ஸ்டேட்டஸ்**" வைப்பதற்கு தேவை இருந்ததில்லை, ஏனென்றால் மனதின் ஆழத்தை உறவுகளுக்கும் சொந்தங்களுக்கும் சொல்வதற்கு ஆயிரம் வழிகள் சூழல்கள் இருந்தது. "**ரீல்ஸ்**" போடுவதற்குத் தேவை இருந்ததில்லை. ஏனென்றால் உறவுகளோடு அன்றாடம் மாலை நேரங்களில் இணைந்து பேசிய கதைகளும், பாடிய பாடல்களும், எல்லாமே சுவராசியமாகவே இருந்தது. அன்று பள்ளியில் உடன்பயின்று பிரிந்த நண்பனையோ, தோழியையோ பல ஆண்டுகள் பார்க்கவில்லை என்றாலும் பாசமும் நட்பும் மாறாமலே இருந்தது வாட்ஸ்அப் குழு மற்றும் வீடியோ கால் அனுபவமோ, முகநூல் தேடல்களோ, இன்ஸ்டாகிராம் குறுஞ்செய்திகளோ தேவைப்படவில்லை. இன்று இணையம் இணையில்லா வசதிகளை தந்த போதும் உறவுகள் உடைத்து உருகுலைந்து கிடப்பதும், நட்புகள் நலிவடைந்து கிடப்பதும் கசப்பான உண்மையே.

**நெருக்கமாக்குகிறதா? – இணையம் :**

***1. உறவுகளை நெருக்கமாக்குகிறது :***

ஆம் என்றே சொல்ல வேண்டும் உலகம் உள்ளங்கைக்குள் அடங்கிப் போய் இருக்கிறது இன்று. உலகின் எந்த மூலையிலிருந்தும் உடனடி தொடர்பு கொள்ளும் வசதி இன்று குடும்பம், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை சமூக ஊடகங்கள, வலைதளங்கள், வீடியோ அழைப்புகள் மூலம் நெருக்கமாக உடனிருப்பதுபோல உணர வைக்கிறது அன்று வெளிநாட்டிற்கு வேலைக்குச் செல்கின்ற கணவரோ, மகனோ, உடன்பிறந்தவர்களோ, நண்பர்களோ தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் பல நாட்கள் காத்திருந்தே கடிதம் மூலமும், பின்னாளில் தொலைபேசி வழி காத்திருந்தும் பேச வேண்டி இருந்தது. அந்த வகையில் இன்று அடுத்த நொடி நினைத்தவர்களை உலகின் எந்த மூலையில் இருந்தாலும் தொடர்பு கொள்ளவும், உறவாடவும், உரையாடவும், இன்ப துன்பங்களை உடனடி பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பை இந்த இணையும் ஏற்படுத்தியிருக்கிறது. அந்த வகையில் இணையம் மனிதர்களை நெருக்கமாக்கியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

***2. வாய்ப்புகளை நெருக்கமாக்குகிறது :***

கல்வி, தொழில்,ஆராய்ச்சி போன்ற துறைகளில் உலகளாவிய ஒத்துழைப்பை ஏற்படுத்துகிறது. இணைய வழிக் கல்வி, தொலைதூரக் கல்வி, வீட்டிலிருந்து வேலை, உலகளாவிய ஆராய்ச்சி என்று எல்லாவற்றையும் இருந்த இடத்திலிருந்து செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி இருக்கிறது. இந்த இணையம் அவசர காலங்களில் உடனடி தகவல் பரிமாற்றம் செய்து உயிர்களை காப்பாற்ற, உறவுகளை அவசர ஊர்திகளை அழைப்பதற்கு உதவியாக நெருக்கமாக்கி இருக்கிறது.

***3. ஒத்தச்சிந்தனை உடையோரை நெருக்கமாக்குகிறது :***

"***அறிவைப் பகிர்ந்தால் அதிகரிக்கும்***" என்று சொல்வார்கள்

அதற்கான பாலமாக இணையம் மாறியிருக்கிறது. ஒரே எண்ணம் கொண்டவர்களை, ஒரே சிந்தனை ஓட்டம் உடையவர்களை இந்த சமூகத்திற்காகவும். சமூக வளர்ச்சிக்காகவும் கருத்துக்களை பதிவிடவும், சிந்தனைகளை செயலாக்கம் செய்யவும் பல விதமான சமூக ஊடக தளங்களை ஏற்படுத்தி, உலகின் பல்வேறு மூலைகளில் இருக்கும் ஒரே சிந்தனை ஓட்டம் கொண்ட நபர்களை நெருக்கமாக்கியிருக்கிறது இந்த இணையம்.

**தனிமையாக்குகிறதா? – இணையம்** :

***1. இது புதுசு கண்ணா புதுசு :***

தொலைத் தொடர்பு சாதனங்கள் சமூக ஊடகங்கள் மற்றும் இணையதள வளர்ச்சி இல்லாத காலத்தில் சாதாரண வீட்டுச் சூழலோடும், சுற்றுச்சூழலோடும் வாழ்ந்தபோது "**நான் தனிமையாக உணர்கிறேன்**" என்றோ "**எனக்கு மன அழுத்தமாக இருக்கிறது**" என்றோ, "**சாக தோன்றுகிறது**" என்றோ சொல்வதைக் கேட்பதே அரிதிலும் அரிதான ஒரு செயலாக இருந்தது. ஆனால் இன்று இன்ஸ்டாகிராமில் ஆயிரம் பேர் பின்தொடர்கிறார்கள் என்னை, முகநூலில் எனக்கு ஆயிரக்கணக்கில் நண்பர்கள் இருக்கிறார்கள் என்று சொல்பவர்களே அதிகமாக நான் தனிமையை உணர்கிறேன், வாழ பிடிக்கவில்லை, சாக தோன்றுகிறது என்றெல்லாம் உலகிற்கு அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது இணையம் பரிசாய் தந்த புதிய பரிசு. எனவே இது புதுசு கண்ணா புதுசு.

***2. தாமரையிலை நீர் போல :***

இணையவழி உறவுகள் எல்லாம் தாமரை இலையில் நீர் போலவே பட்டும் படாமல் நின்று விடுகின்றனர். ("**தாமரையிலை நீர் போல்**" என்பதன் பொருளையும் இத்தலைமுறை இணையத்திலேயே தேடுகின்றார்கள்). எனவே இணையம் போலியான நெருக்கத்தையே தருகிறது உண்மையான உணர்பூர்வமான நெருக்கத்தை ஏற்படுத்துவதில்லை. இணையம் நேரடி மனித உறவுகளை குறைக்கும், நேருக்கு நேர் உரையாடலை மறக்க வைக்கும்.

உறவுகளை இணைக்க வந்த வலை, இன்று பலரைக் கட்டிப்போடும் வலை ஆனது. அன்று உறவுகளை உணர்வுகளும் பாசங்களும் பந்தங்களும் கட்டிப்போட்டது. ஆனால் இன்று மனிதர்களை இணையம் போலி உறவுகளால் கட்டிப்போடுகிறது. சமூக ஊடகங்களில் காட்டப்படும் மெய் நிகர் வாழ்க்கை **"virtual life"** காரணமாக மன அழுத்தம், ஒப்பிட்டு மனோபாவம் உருவாகிறது. தாய், தந்தை, பிள்ளைகள் தனிதனியே அதிக நேரம் அலைபேசி மற்றும் இணையத்தில் செலவழிப்பதால் குடும்ப உறவுகள் தளர்வு அடைந்து, உணர்வு இழந்து உடைந்து போகும் சூழல் உருவாகி இருக்கிறது. மனிதன் மனிதனைப் பார்த்து பேச மறந்து, மறுத்து இயந்திரத்தைப் பார்த்துப் பேசப் பழகிக்கொள்கிறான்.

### *3. நவீன அடிமைகள் நாம் :*

இணையத்தில் அடிமையாக இருப்பதால் (internet addiction), தனிமை உணர்வு அதிகரித்து, அலைபேசி இணையதளம் சமூக வலைத்தளம் என்று எங்கெங்கோ உறவுகளை தேடி உடனிருந்த உறவுகளையும் தொலைத்து உடன் இருக்கவும், உணர்வை பகிரவும் ஆளில்லாமல் தவிப்பவர்கள், தவறி உயிரை மாய்த்தவர்கள் ஏராளம். இணையதளத்தில் நடக்கும் தவறுகளால் தேவையற்ற உறவுகளுக்குள், சிக்கல்களுக்குள் விழுந்து இருந்த உறவுகளையும் நல்ல மகிழ்ச்சியான வாழ்வையும் இழந்தவர்கள் ஏராளம். தனிப்பட்ட வாழ்வு, மகிழ்ச்சி, ஆரோக்கியம், மனநலம் இன்று எல்லாவற்றையும் இழந்து இணைய இன்பத்தில் மூழ்கி இருப்பவர்கள் தனிமையே பரிசாக பெற்றுக்கொள்கிறார்கள்; ஏனென்றால் நாம் நவீன அடிமைகள், இணையச்சிறைக்குள் தனிமைப்படுத்தப்படுகிறோம். நம்மையே நம் தனிமைப்படுத்துகிறோம் என்றே சொல்ல வேண்டும்.

**நிறைவாக** : நிகழ்நிலையிலிருந்து (online) அகழ்நிலைக்கு (offline) செல்லும் முன் இணையம் மனிதர்களை நெருக்கமாகவும், அதே சமயம் தனிமையாகவும் வைத்து விடுகிறது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதற்கு இணையமும் விதிவிலக்கு இல்லை. இணையத்தை பயன்படுத்தும் விதம், கட்டுப்பாடு, சமநிலை ஆகியவை பொறுத்தே இணையம் நம்மை உறவுகளோடு நெருக்கமாக்குகிறதா? இல்லை தனிமைப்படுத்துகிறதா? என்பதை நாம் சீர்தூக்கி பார்க்க முடியும்.

***இணையம் இறைவன் தந்த வரம்:*** சரியாக உறவுகளை கட்டிப்போட உலகை அறிந்து கொள்ள, உயர்வை நோக்கி பயணிக்க பயன்படுத்தும் போது.

***இணையம் இறைவனையே மறக்கும் மறைக்கும் கணம்:*** உன்னை கட்டிப்போட்டு, உறவுகளை சிதைத்து, தனிமை உணர்வைத் தந்து முடக்கும் போது.

**இணையத்தின் இயங்கியலுக்குள் புதைந்து**
**தனிமரமாய் தனித்துவிடப்படாமல்**
**இணையத்தின இயங்கியலை இனிதாய் மாற்றி**
**உண்மை உணர்வுடன் உறவுகளோடு நெருங்கி வருவோம்!!!**

**செயல்பாடுகள்** :

1 அலைபேசி இணையதளங்கள் பயன்படுத்த குறிப்பிட்ட நேரம் ஒதுக்குவோம். (தனிநபர்)

2 வீடுகளில் உரையாடலுக்கு நேரம் மற்றும் சூழல்களை உருவாக்குவோம். (பெற்றோர்)

# விவிலிய புதையல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | தை | க | ள் | மு | ட் | பு | த | ர் | தீ |
| ந | வ | ழி | யோ | ர | ம் | ளி | | ச | ய |
| ல் | | | கு | ர் | ர் | ப் | தா | லா | ஆ |
| ல | | டு | வ | ய | | பு | ல | இ | வி |
| நி | க | ல் | ரி | அ | | மா | ந் | | |
| ல | செ | மா | | ப் | | வு | து | த் | மு |
| ம் | ச | | | ப | | | | | |
| பா | லை | நி | ல | ம் | ந | ள் | ளி | ர | வு |
| றை | தீ | ய | ஆ | வி | | கை | ம் | பெ | ண் |
| | | தா | ல | ந் | து | ல் | ய | தை | பு |

## சிந்தனை...

### "மதிப்பில்லாத செயல் வெற்றி பெறுவதில்லை"

1. உடலை
மதிப்பாக உணர்ந்தால்,
சாப்பிடுவதில்
கவனம் செலுத்துவோம்.

2. நண்பனை
மதிப்பாக உணர்ந்தால்,
மரியாதை கொடுப்போம்.

3. பணத்தை
மதிப்பாக உணர்ந்தால்,
அவசிய செலவுகள் செய்வோம்.



4.உறவுகளை
மதிப்பாக உணர்ந்தால்,
முறிக்க மாட்டோம்.

5.வியாபாரத்தை
மதிப்பாக உணர்ந்தால்,
அர்ப்பணிப்புடன் செய்வோம்.

6. வாழ்க்கையை
மதிப்பாக உணர்ந்தால்,
உயர்ந்த நோக்கத்துடன் வாழ்வோம்.

# நலத்திட்டங்கள்

## முளகுமூடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| பாலப்பள்ளி | அனைத்து அன்பியங்களும் | மருத்துவ நல உதவி | 1 | 40,000/- |
| மணலி | அனைத்து அன்பியங்களும் | மருத்துவ நல உதவி | 1 | 16,500/- |
| செம்பருத்திவிளை | அனைத்து அன்பியங்களும் | மருத்துவ நல உதவி | 1 | 62,180/- |
| தக்கலை | எலியாசியார் அன்பியம் | முதியோர் இல்லம் | | 10,000/- |
| | | எம்மாவுஸ் மனவளர்ச்சி குன்றிய இல்லம் | | 8,000/- |
| பள்ளியாடி | தூய கார்மல் அன்னை அன்பியம் | முதியோர் இல்லம் | | 2,500/- |
| | புனித ஆரோக்கிய அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 3,750/- |
| | அருளாளர் கார்லோ அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,000/- |
| குழிவிளை | தூய ஜார்ஜியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| ஈத்தவிளை | புனித இயேசு அன்பியம் | உணவு கொடுத்தல் | | 2,000/- |
| முளகுமூடு | அன்னை மரி அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 8,000/- |
| | குழந்தை இயேசு அன்பியம் | நலதிட்ட உதவி | 1 | 10,000/- |
| | வேளாங்கண்ணி மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5,050/- |
| | புனித பவுல் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 10,000/- |
| மாடத்தட்டுவிளை | புனித அலோசியஸ் அன்பியம் | கல்வி உதவி | 1 | 1,500/- |
| | புனித மின்னல் மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2,000/- |
| | புனித அல்போன்சாள் அன்பியம் | கல்வி உதவி | 1 | 3,000/- |
| | புனித கார்மல் மாதா அன்பியம் | ஏழைக்கு உதவி | 1 | 500/- |
| | அன்னை வேளாங்கண்ணி மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |
| | புனித அன்னை தெரசா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1,000/- |

## காரங்காடு மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| கொன்னக் குழிவிளை | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | ஏழை நல உதவி குழந்தைகள் | | 4,000/- |
| கண்டன்விளை | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | புற்றுநோயாளி | 1 | 2,200/- |
| சித்தன்தோப்பு | அன்பிய ஒருங்கிணையம் சார்பாக | பட்டரிவிளை சிறுவர் காப்பகம் | | 10,000/- |
| ஆரோக்கியபுரம் | 2-ம் அன்பியம் | கல்வி உதவி | 1 | 2,100/- |
| முரசங்கோடு | அன்னை வேளாங்கண்ணி அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 1,200/- |

## மாத்திரவிளை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| மாத்திரவிளை | டோமினிக் சாவியோ அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 3,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | சகாயநகர் முதியோர் இல்லம் | | 1,500/- |
| | புனித அமல அன்னை அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 2,000/- |
| | புனித பெரியநாயகி அன்பியம் | ஏழை நல உதவி | 2 | 2,100/- |
| மானான்விளை | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 500/- |
| பெருமாங்குழி | புனித குழந்தை இயேசு அன்பியம் | முதியோர் இல்லம் | | 1,000/- |
| கண்ணன்விளை | புனித அமல அன்னை அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 1,500/- |
| செந்தறை | புனித குழந்தை தெரசா அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 5,000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 3,500/- |
| | புனித தேவசகாயம் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 1,000/- |
| நட்டாலம் | புனித அகுஸ்த்தீனா அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| நட்டாலம் | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 5,000/- |
| | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 1,850/- |
| செல்லங்கோணம் | புனித ஆரோக்கிய அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 2,400/- |
| | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 500/- |

## தகவல்

**உலகின் அதிக தூய்மையான காற்று கொண்ட நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரேலியா விளங்குகிறது.**

- பரந்த பசுமை நிலப்பரப்புகள், குறைந்த மக்கள் அடர்த்தி, கடுமையான சுற்றுச்சூழல் விதிகள், மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முயற்சிகள் ஆகியவை இதற்குக் காரணம். சுவாசிக்கும் காற்றின் தூய்மை வெறும் வசதியை மட்டுமல்லாமல், உடல்நலத்தை மேம்படுத்தவும், சுவாச நோய்களை குறைக்கவும், வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் பெரிதும் உதவுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், அங்குள்ள புகழ்பெற்ற இயற்கை அழகுகளுடன், தூய்மையான காற்றையும் சுத்தமான சூழலையும் அனுபவித்து மகிழ்கின்றனர்.
- இந்த சாதனை, நிலைத்த வாழ்க்கை முறைகள் மற்றும் பசுமையான கொள்கைகள் எவ்வாறு ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## அவசர உதவி எண்கள்

1. காவல் உதவி எண் -100
2. தீயணைப்பு & மீட்பு - 101
3. ஆம்புலன்ஸ் - 102 & 108
4. போக்குவரத்து காவல் - 103
5. அவசர கால உதவி எண் -112
6. கோவிட்-19 உதவி எண் - 1075
7. தமிழ்நாடு மழை & வெள்ள உதவி எண்-1070
8. பேரிடர் உதவி எண் - 1077
9. குழந்தைகள் உதவி எண் - 1098
10. பெண்கள் உதவி எண் -181 & 1091
11. கடலோர காவல்படை உதவி எண் - 1093
12. சைபர் குற்ற உதவி எண் -1930
13. சுற்றுலா தகவல் எண் -1913
14. மாணவர்களுக்கான உதவி எண் - 14417
15. முதியோர்களுக்கான உதவி எண் - 14567
16. நிலநடுக்க உதவி எண் - 1092
17. மருத்துவ உதவி எண் - 1911
18. நியாயவிலை அட்டை உதவி எண் - 1967
19. இரத்த வங்கி தகவல் எண் -1910
20. ரயில்வே தகவல் எண் -139

## பங்களவில் புதிய நிர்வாகிகள்

### முளகுமூடு மறைவட்டம்

**கல்லறவிளை :**

தலைவர் : திரு. றிங்கிள்
து.தலைவர் : திருமதி. றீனா
செயலர் : திருமதி. அனிதா
து.செயலர் : திருமதி. விஜயராணி
பொருளர் : திரு. ஜாண் ஜெயசீலன்

**செட்டிச்சார்விளை :**

தலைவர் : திருமதி. பெல்லா
து.தலைவர் : திரு. சார்லஸ்
செயலர் : திருமதி. V. செலின் மேரி
து.செயலர் : திருமதி. சோனியா
பொருளர் : திரு. மரிய மிக்கேல்

**செபஸ்தியார்புரம் :**

தலைவர் : திருமதி. கவிதா
து.தலைவர் : திரு. ரவிகுமார்
செயலர் : திருமதி. லத்தீஸ் மேரி
து.செயலர் : திருமதி. ரேஷ்மா
பொருளர் : திருமதி. விஜிலா

**மாடத்தட்டுவிளை :**

தலைவர் : திரு. M. பிரகாஷ்தாஸ்
து.தலைவர் : திரு. S. M. குரூஸ் உபால்டஸ்
செயலர் : திருமதி. S. தேன்மொழி
து.செயலர் : திருமதி. J. விஜிலா
பொருளர் : திரு. S. மைக்கிள் ஜார்ஜ்

### வேங்கோடு மறைவட்டம்

**மாதாபுரம் :**

தலைவர் : திருமதி. ஜெயஷீலா
து.தலைவர் : திரு. சர்ச்சில்
செயலர் : திருமதி. A. S. ரம்யா
து.செயலர் : திருமதி. ஆஷா
பொருளர் : திரு. ரெமணி பிரேமலா

## வாழ்த்துகள்...

- மறைமாவட்ட அன்பியப் பணிக்குழு நடத்தும் **விவிலிய வினாடிவினாவில்** பங்கேற்று பயன்பெறும் அனைவருக்கும் வாழ்த்துகள்...




**அன்பியப் பணிக்குழு**

## நகைச்சுவை துணுக்குகள்

- மனிதனுக்கும், செல்போணுக்கும் என்ன வித்தியாசம்?
  ***மனிதனுக்கு கால் இல்லன்னா பேலன்ஸ் பண்ணமுடியாது; செல்போணில் பேலன்ஸ் இல்லன்னா கால் பண்ணமுடியாது...***
- டேய் என் ஜாதகப்படி எனக்கு அறிவு ரொம்ப அதிகமாம்.
  ***இப்பவாவது தெரியுதா நான் ஏன் ஜாதகத்தை நம்புறதில்லைன்னு...???***
- இந்த மருந்தை தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுங்க?
  ***பனியன் கூடப் போட்டிருக்க கூடாத டாக்டர்...???***
- மகன் : நாளையிலிருந்து நாம பணக்காரன் ஆகிடலாம் அப்பா...!
  அப்பா : எப்படிடா (மகனே...)?
  ***மகன் : நாளைக்கு எங்க கணக்கு டீச்சர் பைசாவ ரூபாயா மாத்திறது எப்படின்னு சொல்லித் தரப்போறாங்களாம்...!***

## சிறார் பக்கம்





### சிறுகதை

# தன்னம்பிக்கை

ஒருவன் தன்னுடைய தொழிலில் படு தோல்வியடைந்த நிலையில் தான் நடந்து வந்த வழியில், தெரு முனையில் போவோர், வருவோரை மிகுந்த மனவேதனையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது எதிரில் உள்ள குப்பைத் தொட்டியில் ஒருவர் தனக்குத் தேவையான பழைய பேப்பரை எடுத்து சாக்கில் நிரப்பிச் சென்றார். சிறிது நேரத்தில் இன்னொரு நபர் அதே குப்பைத் தொட்டியில் தனக்குத் தேவையான பாட்டில்களை நிரப்பி எடுத்துச் சென்றார். மீண்டும் ஒருவர் தனக்குத் தேவையான பழைய பிளாஸ்டிக் தட்டு. பேப்பரை எடுத்து சாக்கில் நிரப்பிச் சென்றார். அதன்பின் ஒரு நாய் வந்து எச்சில் இலையில் இருந்த சாப்பாட்டை சாப்பிட்டுச் சென்றது. கடைசியாக வந்த ஒரு பசு குப்பையில் கிடந்த பச்சிலையை சாப்பிட்டு தன் பசியை போக்கிக் கொண்டது. இதைப் பார்த்த, படு தோல்வியடைந்த அந்த நபர் கூறிய வார்த்தைகள், ஒரு சிறிய குப்பைத் தொட்டியில் இத்தனை பேர் பிழைத்து வாழ்கிறார்கள் என்றால், இந்த பரந்து, விரிந்து கிடக்கும் இவ்வுலகில் நாம் அனைவரும் எப்படி எல்லாம் பிழைத்து வாழலாம் என்று தன் மனதை திடப்படுத்திக் கொண்டு இனி தனக்கு தோல்வியே கிடையாது. இனி வரும் காலங்கள் பொற்காலமே, மிக பெரிய வெற்றியே. என தன்னம்பிக்கையுடன் தன் பழைய தொழிலை தொடங்கச் சென்றார்.

**உங்கள் கவனத்திற்கு :-**

நவம்பர் மாத அடித்தளம் "**நினைவுகளும் நிகழ்வுகளும்**" என்னும் சிந்தனையில் வர உள்ளது. உங்கள் படைப்புக்கள், கதைகள், கட்டுரைகள், துணுக்குகள், சிந்தனைகளை (15-10-2025) தேதிக்குள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். சிறந்த படைப்புக்கள் அடித்தளம் இதழில் இடம் பெறும்.

**குறிப்பு :**

(எழுதும் நபர்; பெயர், பங்கு, அன்பியம், தொடர்பு எண், தெளிவாக எழுதவும்)

**முகவரி :**

அன்பிய இயக்குநர்,
அன்பிய பணிக்குழு,
டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை - 629 179.

## "வாழ்வை வழிநடத்தும் நெறிகள்"

❁❁❁❁❁

- 🕮 எதிலும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருக்காதீர்கள்.
- 🕮 பிறர் எதிரில் உணர்ச்சி வசப்படாதீர்கள்.
- 🕮 பிறர் நிறையப் பேச அமைதியாகக் கேளுங்கள்.
- 🕮 மற்றவர்களின் செயல்களைப் பாராட்டுங்கள்.
- 🕮 நீங்கள் தவறு செய்திருந்தால் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

## தெரிந்து கொள்வோமா...!

1. ஒரு தலைமுறை எத்தனை ஆண்டுகள் என்பது **தெரியுமா...**

   **33 ஆண்டுகள்**

2. மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை **தெரியுமா...**

   **3000**

3. நமது உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு **தெரியுமா...**

   **25 வாட்**

4. மனித உடலில் உள்ள நரம்புகளின் மொத்த நீளம் **தெரியுமா...**

   **72 மீட்டர்**

5. பேரீச்சம்பழத்தை தேனில் 3 நாட்கள் ஊற வைத்து பிறகு வேளைக்கு 2 வீதம் 3 வேளை சாப்பிட்டால், இதயம் மற்றும் மூளை நரம்புகள் வலிமை பெறும் இரத்தம் சுரக்கும்.

## ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 05.10.2025 | அபக்கூ 1: 2-3;2:2-4 | 2 திமொ. 1:6-8,13-14 | லூக். 17:5-10 |
| 2 | 12.10.2025 | 2அர. 5:14-17 | 2 திமொ. 2: 8-13 | லூக். 17:11-19 |
| 3 | 19.10.2025 | வி.ப. 17:8-13 | 2 திமொ. 3: 14-4:2 | லூக். 18: 1-8 |
| 4 | 26.10.2025 | சீரா. 35: 12-14, 16-18 | 2 திமொ. 4:6-8,16-18 | லூக். 18:9-14 |

அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு.... 9487110298, 8870513177

அன்பிய இயக்குநர்
அன்பிய பணிக்குழு, டிரினிட்டி மேய்ப்புப்பணி மையம்,
உண்ணாமலைக்கடை - 629 179



மறைமாவட்ட கருத்தாளர் பயிற்சி



கருத்தரங்கு குழு ஆய்வு



பள்ளியாடி செயல்தள கூட்டம்



புத்தன்கடை மறைவட்ட செயற்குழு கூட்டம்



திரித்துவபுரம் மறைவட்ட செயற்குழு கூட்டம்



வேங்கோடு மறைவட்ட செயற்குழு கூட்டம்



முளகுமூடு செயற்குழு கூட்டம்



மாத்திரவிளை மறைவட்ட சுற்றுலா

# மறைமாவட்ட சுற்றுலா









